# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 2017/50 - 2017 මැයි මස 05 වැනි සිකුරාදා - 2017.05.05

2017/50 ஆம் இலக்கம் - 2017 ஆம் ஆண்டு மே மாதம் 05 ஆந் திகதி வெள்ளிக்கிழமை

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


## பகுதி I : தொகுதி (I) - பொது

### அரசாங்க அறிவித்தல்கள்

**1974 ஆம் ஆண்டின் 02 ஆம் இலக்க தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்பு சபைச் சட்டம்**

92 ஆம் பிரிவின் கீழான கட்டளை

1974 ஆம் ஆண்டின் 2 ஆம் இலக்க, தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபைச் சட்டத்தின் 92 ஆம் பிரிவின் கீழ், எனக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரத்தின் பிரகாரம், நகர திட்டமிடல் மற்றும் நீர் வழங்கல் அமைச்சர், ரவூப் ஹக்கீம் ஆகிய நான், குறித்த சபைக்கு களுகங்கை நீர் வழங்கல் திட்டத்தின் II ஆவது கட்டத்தின் கீழ் கெஸ்பேவ நிலக்கீழ் நீர்த்தேக்கத்தினை நிர்மாணிப்பதற்காக காணிப் பகுதி ஒன்றினை சுவீகரித்துக் கொள்வதற்கான தேவை ஏற்பட்டுள்ளமையினால் இங்கு கீழே அட்டவணையில் குறித்துக்காட்டப்பட்டுள்ள காணிப்பகுதியின் அசையாச் சொத்துரிமையை சுவீகரித்துக் கொள்ளும் கட்டளை யினூடாக அனுமதியளிக்கின்றேன்.

ரவூப் ஹக்கீம்,
நகர திட்டமிடல் மற்றும் நீர் வழங்கல் அமைச்சர்,

நகர திட்டமிடல் மற்றும் நீர் வழங்கல் அமைச்சு,
இலக்கம் 35, லக்திய மெதுர,
புதிய பாராளுமன்ற வீதி,
பெலவத்தை,
பத்தரமுல்லை,
2017, ஏப்பிறல் 25.

5/2/2/1247

**அட்டவணை**

கொழும்பு மாவட்டத்தில், கெஸ்பேவ பிரதேச செயலாளர் பிரிவில், இலக்கம் 572 பீ, கெஸ்பேவ கிழக்கு கிராம அலுவலர் பிரிவில் கெஸ்பேவ கிராமத்தல் அமைந்துள்ள கஹடகஹவத்த மற்றும் கனன்நொருவவத்த என்றழைக்கப் படும் காணியில் முழு விஸ்தீரணத்தில் இருந்து 289 பேர்ச்சஸ் விஸ்தீரணமுடைய உத்தரவு பெற்ற நிலஅளவையாளர் திரு. எம். எம். டி. குரே அவர்களினால் 2012.09.10 ஆம் திகதியுடையதாக தயாரிக்கப்பட்டுள்ள இலக்கம் 2555 உடைய நில வரைபடத்தின் துண்டு இலக்கம் 1 மற்றும் 2 என சுட்டிக்காட்டப்பட்டுள்ள பின்வரும் எல்லைகளுக்குள் அமைந்துள்ள 02 காணிப் பகுதிகளும்.

1. துண்டிலக்கம் : 01 — விஸ்தீரணம்: சுமார் 3 றூட், 24.5 பேர்ச்சஸ்.

வடக்கிற்கு: மாட்டுவண்டி வீதி மற்றும் துண்டு இலக்கம் : 02; கிழக்கிற்கு: துண்டு இலக்கம்: 02 மற்றும் கனன்நொருவ வத்தயின் ஒரு பகுதி; தெற்கிற்கு: ஓதிரிஸ் முதலாளி டென்சில் பீரிஸ் மற்றும் மாபிடிகே வில்லியம் பீரிஸ் ஆகியவர்களின் சொத்து; மேற்கிற்கு: ஓதிரிஸ் முதலாளி, டென்சில் பீரிஸ் மற்றும் மாபிடிகே வில்லியம் பீரிஸ் ஆகியவர்களின் சொத்து.

2. துண்டிலக்கம் : 02— விஸ்தீரணம்: சுமார் 3 றூட், 24.5 பேர்ச்சஸ்.

வடக்கிற்கு: மாட்டுவண்டி வீதி மற்றும் ஹெரிஸ் அதுகோரலகே அமிஸ் மற்றும் டி. எஸ். சேனாசேகர



*இவ்வர்த்தமானியை www.documents.gov.lk எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

ஆகியவர்களின் சொத்து; கிழக்கிற்கு: டி. எஸ். சேனாசேகர என்பவரின் சொத்து மற்றும் கனன்நொருவ வத்தயின் ஒரு பகுதி; தெற்கிற்கு: துண்டிலக்கம்: 01; மேற்கிற்கு: துண்டிலக்கம் : 01 மற்றும் மாட்டுவண்டி வீதி.

காணிக்கு உரிமை கோருகின்றவரின் பெயரும் முகவரியும்: திரு. எல். சீ. சேநாசேகர, இலக்கம் : 191, வெத மெதுர-ஹொரன வீதி, கெஸ்பேவ.

5-614

---

## 1974 ஆம் ஆண்டின் 2 ஆம் இலக்க தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்பு சபைச் சட்டம்

92 ஆம் பிரிவின் கீழான கட்டளை

1974 ஆம் ஆண்டின் 02 ஆம் இலக்க, தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபைச் சட்டத்தின் 92 ஆம் பிரிவின் கீழ், எனக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரத்தின் பிரகாரம், நகர திட்டமிடல் மற்றும் நீர் வழங்கல் அமைச்சர், ரவூப் ஹக்கீம் ஆகிய நான், குறித்த சபைக்கு மாத்தறை IV ஆம் கட்டத்தின் நீர் வழங்கல் கருத்திட்டத்தின் கீழ் நில்வலா கங்கையின் ஊடாக உவர் நீர் தடுப்பு ஒன்றினை நிர்மாணிப்பதற்கா மேலதிகமாக காணிப்பகுதி ஒன்றினை எடுத்துக் கொள்வதற்கான தேவை ஏற்பட்டுள்ளமையினால், இங்கு கீழே அட்டவணையில் குறித்துக்காட்டப்பட்டுள்ள காணிப் பகுதியின் அசையாச் சொத்துரிமையை எடுத்துக் கொள்ளும் கட்டளையினுடாக அனுமதியளிக்கின்றேன்.

ரவூப் ஹக்கீம்,
நகர திட்டமிடல் மற்றும் நீர் வழங்கல் அமைச்சர்,

நகர திட்டமிடல் மற்றும் நீர் வழங்கல் அமைச்சு,
இலக்கம் 35, லக்திய மெதுர,
புதிய பாராளுமன்ற வீதி,
பெலவத்தை,
பத்தரமுல்லை,
2017, ஏப்பிறல் 28.
5/2/2/1272

**அட்டவணை**

மாத்தறை மாவட்டத்தில், மாத்தறை பிரதேச செயலாளர் பிரிவில், இலக்கம் 417H, வேறகம்பிட கிராம சேவகர் பிரிவில், வேரகம்பிட கிராமத்தில் அமைந்துள்ள மதுகல லியத்த அல்லது பரமுல்ல லியத்த என்றழைக்கப்படும் காணியில் இருந்து 30 பேர்ச்சஸ் விஸ்தீரணமுடைய பின்வரும் எல்லைகளுக்குள் அமைந்துள்ள காணிப்பகுதி.

வடக்கிற்கு: நில்வலா கங்கை; கிழக்கிற்கு: இந்த காணியின் எஞ்சிய பகுதி மற்றும் நில்வலா கங்கை; தெற்கிற்கு: திரு. தலதாவத்த அவர்கள் உரிமை கோரும் காணி மதுகல லியத்த இல் இருந்து பெலிகஹவத்த வரையான வீதி; மேற்கிற்கு: இந்த காணியின் எஞ்சிய பகுதி மற்றும் மதுகல லியத்த இல் இருந்து பெலிகஹவத்த வரையான வீதி.

காணிக்கு உரிமை கோருகின்றவரின் பெயரும் முகவரியும்: திரு. லீலசேன தலதாவத்த, 5/76, 5 ஆம் குறுக்குத் தெரு, வேறகம்பிட, மாத்தறை.

5-615

---

## 1974 ஆம் ஆண்டின் 2 ஆம் இலக்க தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்பு சபைச் சட்டம்

92 ஆம் பிரிவின் கீழான கட்டளை

1974 ஆம் ஆண்டின் 02 ஆம் இலக்க, தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்பு சபைச் சட்டத்தின் 92 ஆம் பிரிவின் கீழ், எனக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரத்தின் பிரகாரம், நகர திட்டமிடல் மற்றும் நீர் வழங்கல் அமைச்சர், ரவூப் ஹக்கீம் ஆகிய நான், குறித்த சபைக்கு மாத்தறை IV ஆம் கட்ட நீர் வழங்கல் கருத்திட்டத்தின் கீழ் உள்வாங்கு கிணறு மற்றும் நீர் இறைக்கும் இயந்திரசாலை ஆகியவற்றை நிர்மாணிப்பதற்காக காணிப்பகுதி ஒன்றினை எடுத்துக் கொள்வதற்கான தேவை ஏற்பட்டுள்ளமையினால், இங்கு கீழே அட்டவணையில் குறித்துக்காட்டப்பட்டுள்ள காணிப் பகுதியின் அசையாச் சொத்துரிமையை எடுத்துக் கொள்ளும் கட்டளையினுடாக அனுமதியளிக்கின்றேன்.

ரவூப் ஹக்கீம்,
நகர திட்டமிடல் மற்றும் நீர் வழங்கல் அமைச்சர்,

நகர திட்டமிடல் மற்றும் நீர் வழங்கல் அமைச்சு,
இலக்கம் 35, லக்திய மெதுர,
புதிய பாராளுமன்ற வீதி,
பெலவத்தை,
பத்தரமுல்லை,
2017, ஏப்பிறல் 25.
5/2/2/1254

**அட்டவணை**

மாத்தறை மாவட்டத்தில், மாலிம்பட பிரதேச செயலாளர் பிரிவில், இலக்கம் 350A, கடுவன்கொட கிராம சேவகர் பிரிவில் கடுவன்கொட கிராத்தில் அமைந்துள்ள ஹெட்டிகே வத்த என்றழைக்கப்படும் காணியை சுட்டிக்காட்டக் கூடியவாறு உத்தரவு பெற்ற நிலஅளவையாளர் திரு. டி. யு. அபேகுணவர்தன அவர்களினால் 1997.07.17 ஆம் திகதியுடையதாக தயாரிக்கப்பட்டுள்ள இலக்கம் 1410 உடைய நிலவரைவில் துண்டு இலக்கம் 2 என குறித்துக்காட்டப்பட்டுள்ள முழு காணி விஸ்தீரணத்தில்

இருந்து சுமார் 0.050 ஹெக்டயார் (20 பேர்ச்சஸ்) விஸ்தீரணமுடைய பின்வரும் எல்லைகளுக்குள் அமைந்துள்ள காணிப்பகுதி.

வடக்கிற்கு: இந்த வரைபடத்தின் 1 ஆம் துண்டிலக்க காணி மற்றும் கிராம சபை வீதி; கிழக்கிற்கு: இந்த வரைபடத்தின் 3 ஆம் துண்டிலக்க காணி மற்றும் கிராம சபை வீதி; தெற்கிற்கு: இந்த வரைபடத்தின் 3 ஆம் துண்டிலக்கம்; மேற்கிற்கு: இந்த வரைபடத்தின் 1 ஆம் துண்டிலக்கம், துண்டிலக்கம் 2 இன் எஞ்சிய பகுதி.

காணிக்கு உரிமை கோருகின்றவரின் பெயரும் முகவரியும்:
1. திருமதி. ரூபிகா தமயன்தி, ஹெட்டிகே வத்த, கடுவன் கொட, பாலடுவ.

5 - 616

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்தில் அச்சிடப்பட்டது.